# அனுபவவாத மெய்யியலில் புலக்காட்சி - ஜோன் லொக்கினை சிறப்பாதாரமாகக் கொண்ட ஆய்வு

சோ. ஜெகநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியல் கற்கைத் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
E- Mail: jeganathans@esn.ac.lk

***ஆய்வுச் சுருக்கம்***

*மேலைத்தேச மெய்யியலில் அறிவினை முதன்மைப்படுத்தியதாக தோற்றம் பெற்ற நவீன காலத்தில் உருவான அனுபவவாத மெய்யியல் அறிவின் தன்மை, அதன் இயல்பு, என்பன பற்றி நுணுக்கமான ஆய்வினை புலக்காட்சியை ஆதாரமாக வைத்து நிகழ்த்த முற்பட்டிருந்தது. மெய்யியலில் மட்டுமன்றி உளவியலிலும் பேசப்படும் முக்கிய எண்ணக்கருவாக புலக்காட்சி விளங்குகிறது. புலக்காட்சி எளிமையான ஒன்றாகவும் எத்தகைய அறிவுத்தொகுதிகளுக்கும் தொடக்கமும் முடிவுமாக இருக்கிறது. அறிவியல் ஆராய்ச்சிகள் அனைத்தும் புலக்காட்சியறிவில் தொடங்கி புதிய கருத்துக்களை உருவாக்குகின்றன. அக்கருத்துக்களை மீண்டும் சரிபார்க்கவும் மீண்டும் புலக்காட்சி அறிவையே நாடுகின்றனர். புலக்காட்சி என்பது உலகின் கண் உள்ள பொருட்களையும் நடக்கும் நிகழ்ச்சிகளையும் கண்களால் அறிவது மட்டுமன்றி ஐந்து புலன்களாலும் அறிந்து கொள்ளும் ஓர் உளச்செயற்பாடாகும். காட்சியை ஒரு வகையில் அனுபவம் எனக்கூறும் அதேவேளை அனுபவம் அனைவருக்கும் பொதுவானது. ஆகையால் புலக்காட்சி அறிவும் எல்லோருக்கும் உண்டு. இதில் புலக்குறைபாடுடையவர்கள் விதிவிலக்கானவர்கள். இந்தப்புலக்காட்சி அறிவினது ஆழமும் அகலமும் ஏற்புடைமையும் அவரவர் கொள்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப முன்னிலைப்படுத்தப்பட்டும் பின்னிலைப்படுத்தப்பட்டும் காணப்படுகிறது. இப்புலக்காட்சி பற்றிய ஏற்புடைமையும் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படுகிறது. இந்த அடிப்படையில் அனுபவ வாத மெய்யியலில் புலக்காட்சி பற்றி லொக்கினை சிறப்பாதாரமாகக் கொண்டு ஒப்பீடு, பகுப்பாய்வு, விமர்சனம் போன்ற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆராய இக்கட்டுரை முனைகிறது.*

*திறவுச் சொற்கள்: மேலைத்தேச மெய்யியல். அனுபவ வாத மெய்யியல், புலக்காட்சி, பகுப்பாய்வு*

## 01. அறிமுகம்

மேலைத்தேய மெய்யியலிலும் கீழைத்தேய மெய்யியலிலும் புலக்காட்சி தொடர்பாக பல்வேறு சிந்தனா கூடங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அந்த அடிப்படையில் புலக்காட்சியில் அனுபவத்தையும் புலன்களையும் முதன்மைப்படுத்திய லொக் பிரித்தானிய நாட்டில் 1632 இல் பிறந்தார். இளமையிலிருந்தே கல்வியில் சிறந்து விளங்கினார். இளமையிலையே தத்துவம் சார்ந்த நூல்களை வாசிப்பதும் அதை திறனாய்வு செய்வதன் மூலம் முற்போக்கான சிந்தனைகளை முன்வைப்பதும் இவரது பிரசித்திக்கு காரணமாயிற்று. இவர் இளைஞனாக இருக்கின்ற போது இங்கிலாந்தில் ஏற்பட்ட உரிமைப் போர் இவரை அரசியலில் ஈடுபடுத்தவும் அதன்

விளைவாக 1683 இல் நாட்டை விட்டு வெளியேறவும் வழிவகுத்தது. போலந்து நாட்டில் அடைக்கலம் புகுந்த இவர் டேக்காட்டின் தத்துவம் சார்ந்த நூல்களை வாசிக்கத் தொடங்கினார். லொக்கினை மெய்யியல் பக்கம் திசைதிருப்பியது டேக்காட்டின் தத்துவமே எனலாம். இதன் பெறுபேறாக 1692 இல் மனித விளக்கங்களை உள்ளடக்கிய கட்டுரை என்ற நூலை எழுதினார். அழகியல் ஒழுக்கவியல் என பல்துறை ஆராய்ச்சியில் ஈடுபட்ட போதும் அனுபவ வாதத்துடனான அறிவாராய்ச்சியியல் சிந்தனையே தத்துவத்திற்கான முதன்மைப் பங்களிப்பாக கருதப்படுகிறது. உளம் தொடர்பாக அவர் கொண்டிருந்த ஆர்வமே இதற்கு காரணம் எனலாம். மனிதன் பிறக்கின்ற போது அவனது உள்ளம் வெற்றுக் காகிதமாக உள்ளது. புலன்களின் துணை கொண்டு புறப்பொருட்களை அவதானிக்கும் போது வரும் மூல அறிவிற்கு அடிப்படையாக இருப்பது இப்புலக்காட்சியாகும் என்றார்.

## 02. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது பகுப்பாய்வு விமர்சன முறையிலாகும். எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது. குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Reading) தரவுகள் பெறப்பட்டு இங்கு ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

## 03 ஆய்வின் நோக்கங்கள்

- புலக்காட்சி தொடர்பாக கீழைத்தேய மற்றும் மேலைத்தேய மெய்யியலின் பல்வேறு பகுதிகளில் கூறப்படும் கருத்துக்களையும் அது தொடர்பாக கூறப்படுகின்ற பல்வேறு நியாயப்படுத்தல்களையும் கண்டறிதல்.

- புலக்காட்சி உருவாக்கத்தில் ஜோன் லொக் கூறும் புலன் அனுபவங்கள் எந்த அளவிற்கு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதைக் கண்டறிதல்.

- சராசரி மனிதனுக்குப் பல்வேறு விதமான காட்சிக் கோலங்கள், ஒரே காட்சி பலருக்கு பல்வேறு விதமாக தோற்றமளிப்பதற்கான காரணங்கள் உடலியல் (புலன்கள்) குறைபாடுகளினால் ஏற்படுகின்றதா? அல்லது இதற்கு வேறு ஏதாவது இருக்கிறதா? என்பதை ஜோன் லொக்கினது கருத்துக்களை ஆராய்வதன் மூலம் கண்டறிதல் ஆகிய நோக்கங்களை இவ்வாய்வு கொண்டு காணப்படுகின்றது.

## 04. புலக்காட்சி பற்றிய அறிமுகம்.

புலக்காட்சியானது மெய்யியலில் தொடக்கத்திலிருந்து காணப்படுகின்ற முக்கிய விடயமாக உள்ளது. மேலைத்தேயத்திலும் சரி, கீழைத்தேயத்திலும் சரி புலக்காட்சிக்கு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. விஞ்ஞானத்தின் இன்றியமையாத அம்சமாக இப்புலக்காட்சி கருதப்படுகின்றது. புலக்காட்சி

என்றால் என்ன? என்று நோக்குகின்றபோது ஐம்புலன் அனுபவம் புலக்காட்சி என்று கூறப்படுகின்றது. அவ்வாறான அனுபவங்களில் கட்புலக்காட்சிக்கே முக்கியத்துவம் அதிகம் அளிக்கப்படுகின்றது. இது தொடர்பாக பல்வேறு ஆராய்ச்சிகளை உளவியலாளர்களும், உடற்கூற்றியியலாளர்களும் மேற்கொண்டிருக்கின்றனர். இருப்பினும் இப்புலக்காட்சி தொடர்பான ஆய்வு மெய்யியலிலும் இல்லாமல் இல்லை. பொதுவாக புலக்காட்சி செயன்முறையில் புலக்காட்சியினை ஏற்படுத்தும் புறப்பொருள் (Object) முக்கியம்பெறுகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு கீழைத்தேய மேலைத்தேய மெய்யியலாளர்களும், உளவியலாளர்களும் பல வினாக்களை தொடுப்பதனூடாக பல்வேறு பிரச்சினைகளை முன்வைக்கின்றனர்.

## 4.1 மேலைத்தேச மெய்யியலில் புலக்காட்சியின் முக்கியத்துவம்

மேலைத்தேயத்தில் புலக்காட்சி நீண்ட வரலாற்றை கொண்டதாக காணப்படுகின்றது. ஆதிகிரேக்க காலத்திலிருந்தே புலக்காட்சி தொடர்பான சிந்தனை மேலோங்கி காணப்படுகின்றது. கிரேக்கர்களின் ஆரம்பகால ஆய்வு புறஉலகைப் பற்றியதாகக் காணப்பட்டது. ‘‘புலன்களினால் பெறத்தக்க தோற்றப்பாடுகள் பற்றிய ஆய்வு.’’ என புலக்காட்சிக்கு வரைவிலக்கணமளித்தனர் கிரேக்கர்கள். பிளேட்டோவின் காலத்தில் புலக்காட்சி தொடர்பான தவறான முடிவுகள் பெறப்படுவதையும், முடிவுகள் ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுவதையும் அறியமுற்பட்டதாலேயே கருத்துமுதல் வாதம் (Idealism) தோற்றம்பெற்றது. பிற்பட்ட காலத்தில் கருத்துமுதல் வாத்திலிருந்து விலகி அனுபவமுதல் வாதிகளான லொக், பார்க்ளி, ஹியூம் போன்றவர்கள் புலக்காட்சியை மையப்படுத்தி தங்கள் சிந்தனைகளை விளக்கிச் சென்றனர். அதனைத் தொடர்ந்து ஒகஸ்ட் கொம்ட் என்பவரினால் நேர்க்காட்சி வாதம் (Positivism) தோற்றுவிக்கப்பட்டது. எமது புலக்காட்சிக்கு உட்படக்கூடிய அறிவையே உண்மையான, ஏற்புடைய அறிவு என நேர்க்காட்சி வாதம் விளக்கியது. இது இயற்கை விஞ்ஞானத்திலும், விஞ்ஞானிகள் உண்மையை கண்டறிவதிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது.

நேர்க்காட்சி வாதமானது, பகுப்பாய்வு மெய்யியலில் முக்கியமானதாகக் கொள்ளப்படும் தர்க்கப் புலனெறி வாதத்தின் (Logical Positivism) தோற்றத்திற்கு வழிகோலியது. தர்க்கப் புலனெறி வாதிகளின் வாய்ப்பு பார்த்தல் கோட்பாடு (Verification Theory) அனைத்தும் இப்புலக்காட்சியையே அடிப்படையாக கொண்டிருந்தன. ரஸலின் புலன்தரவுக் கோட்பாட்டிலும் புலக்காட்சி முக்கியம் பெறுகின்றது. பொருட்கள் புலனுக்கு தென்படும் நிலைக்கும், அது உண்மையில் காணப்படும் நிலைக்குமிடையில் வேறுபாடு உள்ளது. எனவே நாம் காட்சியில் பொருட்களை உள்ளவாறு அறிய முடியாதாயின் நாம் எதனை அறிகின்றோம்? என்றவாறு தனது ஆய்வுகளை நிகழ்த்தினார். (Russell, 1927: 1-6)

புலன்தரவை நாம் கேட்டல், பார்த்தல் போல விளங்கிக்கொள்ள முடியாது. இதனால்தான் ஏ.ஜே.அயர் தனது Problems of Knowledge என்ற நூலில் புலன்தரவுக் கொள்கை மாயையிலிருந்து எழும் வாதம் (Arguments from Illusion) என்றவாறு அழைக்கின்றார். (அனஸ்.எம்.எஸ்.எம்., 2006:49,83) இவ்வாறு புலக்காட்சி தொடர்பான கருத்துக்கள் சிலிக், கார்னாப், ரஸல், விக்கின்ஸ்ரைன் ஆகியோரால் வளர்த்தெடுக்கப்பட்டது.

புலக்காட்சிக்கு முதன்மை கொடுத்த உளவியல் பள்ளியாக அமைவது கெஸ்ரோல்ட் கொள்கையாகும். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனியில் உருவாகிய இப்பள்ளியில் மாக்ஸ் வேதிமர் (1880-1943), கொவ்கா (1886-1967), வூல்ங் பாங் (1887-1967), கோலர் (1889-1959) போன்றவர்கள் முக்கியமானவர்கள். முழுமையான ஓர் உண்மையை பல கூறுகளாக பகுத்து பிரித்தறிய முடியாதென்ற இவர்களது அடிப்படை தத்துவமானது ஐம்புலன்கள் மூலம் மனித மனத்திற்கு வரும் விடயங்களை ஒழுங்குபடுத்தி இணைப்பதற்கு புலக்காட்சி உதவுகிறது எனக்குறிப்பிடுகிறது. புற உலகை காட்சிக்குட்படுத்துவதன் மூலம் வரும் அனுபவங்களை தனிக் கூறுகளாக பிரித்துப் பாகுபடுத்திப் பார்க்காமல் அவற்றை முழுமையாக நோக்குவதன் மூலமாகவே (புலக்காட்சி) மனித நடத்தையை புரிந்து கொள்ள முடியும் என்றனர். புலன் உணர்ச்சி, சிந்தனை, மனவெழுச்சி எனத் தனித்தனியாக கூறுபடுத்தினால் மனித நடத்தை அதன் பொருளை இழந்துவிடும் என்றனர். (ஜமாஹீர், 2009:33)

புலனுணர்ச்சிகளே புலக்காட்சிக்கு அடிப்படை எனக் கூறும் கெஸ்ரோல்ட் வாதிகள் அனுபவங்களை ஒழுங்கமைத்து அர்த்தமுடையதாக்குவதற்கு உதவும் படிநிலையே புலக்காட்சியாகும் என்றனர். (Banjamin, Lahey., 1998:168) அனுபவங்கள் வாயிலாக பெறப்படும் விடயங்களை ஒரே நேரத்தில் இணைப்பதற்கு புலக்காட்சி உதவுகிறது. புலக்காட்சி செயன்முறையில் கெஸ்ரோல்ட் வாதிகள் உருவமும் பின்னணியும் (Figure – ground) என்ற விடயத்தை விளக்கிச் சென்றனர். நாம் எதனை எமது புலக்காட்சிக்கு உட்படுத்தியிருக்கின்றோமோ அது எமக்கு உருவமாகவும் ஏனைய அனைத்தும் பின்னணியாகவும் தெரியும். நாம் ஒரு உருவத்தை அவதானிக்கின்ற போது அதன் பின்னணியை அவதானிக்காமல் விடுவதால் முழுமையான அனுபவத்தை பெறமுடிவதில்லை. அதேபோல் பின்னணியை மாத்திரம் அவதானித்து உருவத்தை அவதானிக்காமல் விடுவதானாலும் முழுமையான அனுபவம் கிடைக்காமல் போகிறது. ஆகவே நாம் முழுமைக் காட்சியை பெற வேண்டுமென்றால் உருவமும் பின்னணியும் அவதானிக்கப்பட வேண்டுமென்றும் கெஸ்ரோல்ட் வாதிகள் குறிப்பிடுகின்றனர்.

புலக்காட்சி தொடர்பாக கெஸ்டோல்ட் வாதிகள் பல விதிகளை முன்வைத்துள்ளனர். அண்மை விதி, ஒப்புமை விதி, நிறைவு விதி, முடித்தல் விதி, சமச்சீர் விதி போன்ற விதிகளினூடாக புலக்காட்சி செயன்முறைகளே உளவியலில் மையப் பொருள்களாக அமைதல் வேண்டும். காரணம்

எமது புலக்காட்சிக்கு அடிப்படையாக இருப்பது எமது புலன்களாகும். அதாவது புலன்கள் தரவுகளை ஒழுங்குபடுத்துவதிலேதான் புலக்காட்சியின் வலிதுதன்மை உள்ளடங்கியிருக்கும். அவ்வலிதுத்தன்மையை உறுதிப்படுத்தும் பொருட்டு அனுபவங்களை பகுப்பாய்வு செய்வதையோ வேறு வேறு வடிவங்களாகப் பிரித்துப் பார்ப்பதையோ இவர்கள் விரும்பவில்லை. அவ்விதம் செய்வதனால் கெஸ்ரோல்ட் என்ற முழுமை இழக்கப்படும் என்பதே இவர்களது வாதமாகும். இன்றுவரை மேலைத்தேய மெய்யியலில் புலக்காட்சி தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. அந்த வகையில் மேலைத்தேயத்தில் தோன்றிய அனுபவ வாத மெய்யியலில் இப்புலக்காட்சி பற்றி அடுத்து ஆராய வேண்டியுள்ளது.

**05. அனுபவவாதமும் புலக்காட்சியும்.**

மெய்யியல் வரலாற்றில் நவீன காலத்தில் அறிவே பிரதான ஆய்வு விடயமாக இருந்தது. இக்காலப்பகுதியில் அறிவினுடைய மூலங்கள் பற்றிய தேடலில் இருவேறு சிந்தனைக்கூடங்கள் தோற்றம் பெற்றன. அவையாவன:-

1. அறிவு + முதல் + வாதம் அல்லது காரண + முதல் + வாதம்

2. அனுபவ + முதல் + வாதம்

காரண முதல் வாதம் அறிவினுடைய மூலமாகப் பகுத்தறிவைக் குறிப்பிட்டது. இதன் ஸ்தாபகர்களாக டேக்காட், லைபினிஸ்ட், ஸ்பினோசா போன்றவர்களைக் குறிப்பிடலாம். இதற்கு மாறாக அனுபவ முதல் வாதமானது அறிவின் மூலமாக அனுபவத்தைக் குறிப்பிட்டது. இத்தகைய அனுபவ முதல் வாதிகளாக லொக், பார்க்லி, ஹியூம் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இத்தத்துவமே கி.பி 19-20 ஆம் நூற்றாண்டுகளில் எழுச்சி பெற்ற 'நேர்க்காட்சி வாதம்', 'பகுப்பாய்வுத் தத்துவம்' ஆகியவற்றுக்கு முன்னோடியாக விளங்கியது. இந்த வகையில் அனுபவ முதல் வாதிகள் அறிவின் மூலமாக அனுபவத்தைக் குறிப்பிடுவதன் மூலம் புலக்காட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

ஐரோப்பிய காரணவாதிகளுக்கு முரண்பட்ட வகையில் மனித அறிவு அனைத்தும் அனுபவ வாயிலாக பெறப்படுகின்றது என அனுபவமுதல் வாதிகள் வாதிட்டனர். இவர்களின் கருத்துப்படி அறிவானது பின்னையது ஏதுவானதுதாகும். இதனை தொகுத்தறிவு எனவும் கூறுகின்றனர். அந்த வகையில் அறிவாராய்ச்சியியல் ரீதியான வினாக்களை மிகத் தெளிவான பதங்களினூடாக வினவியவர் ஜோன் லொக் ஆவார். அறியப்பட்டவற்றை விட அறியப்பட இருக்கின்றன பற்றி கூடுதலான ஆர்வம் கொண்டார்.

அறிவு முதல் வாதத்தை மறுக்கும் லொக் 'A Letter Concerning Tolerate (1689)', 'An Essay Concerning Human Understanding (1690)' ஆகிய இரு நூல்களிலும் அனுபவ முதல் வாதக் கருத்துக்களை முன்வைக்கின்றார். லொக் மனிதன் பிறக்கும் போது எவ்வித மனப்பதிவுகளுமின்றி பிறக்கின்றான். பின்னர் ஐம்பொறிகளின் வழி

புற உலகுடன் ஊடாட்டம் பெறும் போது தான் அறிவினைப் பெறுகின்றான் என்றார். இதனை லொக் (Tabula Rasa) 'ரெபுலா ரசா' எனக் குறிப்பிடுகின்றார். எந்த வித அடையாளமும் இல்லாத வெற்றுத்தாள் போன்றது மனம். படிப்படியான அனுபவங்களின் மூலம் இவ்வெற்றுத்தாளில் புள்ளிகளும். கோடுகளும், சித்திரங்களும் தோன்றுகின்றன. இவ்வாறு அனுபவங்களின் தடங்களால் உருவாவதே அறிவு என்பதை லொக் புலக்காட்சியை அடிப்படையாக வைத்து விளக்கிச் செல்கிறார்.

**06. லொக்கின் பார்வையில் புலக்காட்சி**

மனமானது தூய்மையான வெற்றுக்கடதாசியை ஒத்தது என வாதிட்ட லொக் உள்ளத்துடன் தொடர்புபட்ட வகையில் எண்ணங்களின் தொகுதி ஒன்று உள்ளது என ஏற்றிருந்தார். அறிவுடன் தொடர்புபட்டதாக இருக்கும் எண்ணங்களின் தோற்றுவாயானது இரு நிலைகளுக்கூடாக முனைப்பு பெறலாம் என லொக் கூறியிருந்தார்.

1. புலன் உணர்வு (sensation)

2. அக நோக்கு (Reflection)

எமது புலன்கள், புலன் உணர்வு ரீதியான பதார்த்தங்களை அடையாளம் கண்டு கொள்வதனூடாக பதார்த்தங்கள் தொடர்பான அல்லது பொருட்கள் தொடர்பான வெவ்வேறு புலத்தோற்றப்பாடுகள் எமது உள்ளத்திற்கு வந்து சேர்கிறது. எண்ணங்களை குளிர்மை, உ்ண நிலை, இன்ப நிலை முதலான பண்புகளாகக் குறிப்பிடலாம். இவற்றைப் புலப்பண்புகள் என்கிறோம். இந்தப்பண்புகள் புறத்தோற்றப்பாட்டின் வழியாக உள்ளத்தைச் சென்றடையும் போது அவை எண்ணங்களாக மாற்றப்பட்டுவிடும். (ஜமாஹீர், 2010:36,37) புலன்கள் இல்லையேல் எண்ணங்கள் இல்லையாதலால் எண்ணங்களின் மூலம் (sourse) புலத்தோற்றப்பாடாகும். இதனையே லொக் புலக்காட்சி என்பதன் மூலம் குறிப்பிடுகின்றார். லொக்கின் கருத்தில் இப்புலக்காட்சி என்பது அனுபவமேயாகும்.

அனுபவம் மட்டுமல்ல இன்னுமொரு விடயமும் புலக்காட்சியோடு தொடர்புபடுவதாக லொக் கூறுகின்றார். அதனை அவர் புலன் வழி உணர்வுநிலை என கூறுகின்றார். இதன் மூலம் அர்த்தப்படுவது யாதெனில் உள்ளத்தின் அகரீதியான செயற்பாடுகளான சிந்தனை, நம்பிக்கை கொள்ளல், ஐயுறல், அறிவினைப் பெறுதல், சித்தம் போன்ற செயற்பாடுகளே ஆகும். இவை வெளிப்புற புலனுணர்வு அடிப்படையிலான பதார்த்தங்களினூடாக அல்லாமல் உள்ளத்தின் அக ரீதியான செயற்பாடுகளினாலேயே உணரப்படுகிறது எனக் கூறும் லொக் எமது சகல எண்ணங்களினதும் தோற்று நிலையானது ஒன்றில் புலன் உணர்வினால் அல்லது அனுபவத்தால் கிடைக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை என்றார். உண்மையில் இவ்விரு செயற்பாடுகளினாலும் உள்ளத்தின் எண்ணங்கள் நிறைந்திருக்கின்றன எனவும் லொக் கூறுகின்றார். இவ்விரு தோற்றுவாய் மூலமாக பெற்றுக்கொள்ளப்படும் புலக்காட்சி உணர்வுகளைத்தவிர வேறு எதையும் உள்ளத்திற்கு எண்ணங்களைக் கொண்டு சேர்ப்பது அல்ல என்ற விடயத்தில் லொக் உறுதியாக இருந்தார்.

புலக்காட்சியும் அதனோடு தொடர்புபட்ட புலன் வழி உணர்வு நிலையும் உள்ளத்தில் எண்ணங்களை உருவாக்குகின்றன. லொக்கினுயை அறிவாராய்ச்சியலில் எண்ணங்கள் பற்றிய ஆய்வு பிரதான இடத்தைப் பெறுகிறது. டேக்காட்டின் உடன் பிறந்த எண்ணங்கள் பற்றிய கருத்தினை மறுத்த லொக் அனுபவத்தின் மூலம் விளைகின்ற புலன் அனுபவம் சார்ந்த எண்ணங்களை பற்றி விரிவாக விளக்குகின்றார். எண்ணங்களின் உடன்பாடும் எதிர்மறையும் அறிவாராய்ச்சியலுக்கு அடிப்படையாக இருக்கின்றன. அனுபவத்தினால் உருவாகும் எண்ணங்களிற்கிடையே உடன்பாடு இருந்தால் உடன்பாடான அறிவும் இல்லையேல் எதிர்மறையான அறிவும் பிறக்கும். உதாரணமாக சீனி, இனிப்பு ஆகிய இரு எண்ணங்களிற்கிடையிலும் ஒரு உடன்பாடு இருந்தால் சீனி இனிக்கும் என்ற அறிவு பிறக்கின்றது. அவ்வாறே அனுபவத்தால் உருவாகும் எண்ணங்களிற்கிடையே எதிர்மறை இருந்தால் எதிர்மறையான அறிவு பிறக்கும். கல், மென்மை ஆகிய இரண்டு எண்ணங்களிற்கிடையே எதிர்மறை நிகழ்வதால் கல் மென்னையானது அல்ல என்ற அறிவு பிறக்கின்றது.

எனவே அனுபவத்தின் மூலம் கிடைக்கின்ற எண்ணங்களின் மூலம் தான் அறிவு உருவாகின்றது என லொக் குறிப்பிகின்றார். மனித மனதில் எண்ணங்கள் எவ்வாறு பதியப்படுகின்றன என்பதற்கு லொக் உளவியல் அடிப்படையில் விளக்கத்தை முன்வைத்திருந்தார். எண்ணங்கள் இரணடு அடிப்படையில் பெறப்படுவதாக லொக் குறிப்பிகின்றார்.

1. புலக்காட்சி

2. மனக்காட்சி அல்லது பிரதிபலிப்பு

புலன்கள் புற உலகுடன் தொடர்பு கொள்வதன் மூலமாக எண்ணங்களை பெற்றுக்கொள்கின்றன. அவ்வாறான எண்ணங்களே புலக்காட்சி சார்ந்த எண்ணங்களாகும். எமது காதால் நாம் பெற்றுக்கொள்கின்ற ஒரு சத்தம் ஒரு எண்ணமாக மனதில் பதியப்படுகிறது. மனக்காட்சி சார்ந்த எண்ணம் என்பது தனக்குத் தானே சிந்திப்பதன் மூலமாக ஏற்படுகின்ற அனுபவங்களைக் குறிப்பிடுகிறது. மகிழ்ச்சி, வேதனை போன்றவற்றை குறிப்பிடலாம்.

மனதில் உருவாகும் எண்ணங்கள் அனைத்தையும் பின்வரும் இரு பிரிவுக்குள் அடக்கலாம் என லொக் கூறுகின்றார். அவை எளிய எண்ணங்கள் மற்றையது கலப்பு எண்ணங்கள் என்பனவாகும்.

எளிய எண்ணங்கள் என்பது புலக்காட்சி, மனக்காட்சி ஆகிய இருவகையான நேரடியான அனுபவங்களின் மூலம் உருவாகும் எண்ணங்கள் எளிய எண்ணங்களாகும். இவ்வாறான எளிய எண்ணங்கள் எமது புலங்களின் மூலம் பெற்றுக் கொள்ளின்ற எண்ணங்களாக காணப்படும். புலக்காட்சி வாயிலாக மனதில் பதிவான எளிய எண்ணங்களை லொக் நால் வகைப்படுத்துகின்றார்.

1. தனி ஒரு புலனால் உருவாகும் எண்ணம் - சத்தம், வாசனை
2. ஒன்றிற்கு மேற்பட்ட புலனால் உருவாகும் எண்ணம் - அசைவு, பார்வை
3. அக உணர்வின் மூலம் உருவாகும் எண்ணம் - ஞாபகப்படுத்துகை, முற்கற்பிதம், பகுப்பாய்வு அளவீடு ஒப்பீடு
4. புலன் உணர்வு, அகஉணர்வு மூலம் உருவாகும் எண்ணம் - மகிழ்ச்சி, ஒற்றுமை

இந்நான்கு எளிய எண்ணங்களும் அறிவுத்தொகுதியின் மூலக்கூறாக அமையும் அதேவேளை இவ்வெண்ணப்பதிவில் மனம் எந்த விதத்திலும் செயற்படுவதில்லை.

கலப்பு எண்ணங்கள் எனப்படுவது எளிய எண்ணங்களைக் கொண்டு சிந்தனையின் தொழிற்பாட்டினால் அல்லது சிந்நனையினுடைய உத்தியினால் மனம் உருவாக்கி கொள்ளும் எண்ணமாகும். மனத்தால் தானே தனிமனித எண்ணங்களை உருவாக்க முடியாது. ஆனால் அனுபவத்தில் இருந்து புலக்காட்சியின் வாயிலாக மனத்தில் பதிவான எளிய எண்ணங்களைக் கொண்டு மனம் ஆயிரமாயிரம் கூட்டு எண்ணங்களை உருவாக்க இயலும். மனத்திற்கு அத்தகைய ஆற்றல் உண்டு. இணைப்பு, பிரிப்பு, தொடர்பு ஆகிய மூவகை செயல்களால் உருவாகும் கலப்பு எண்ணங்களை லொக் மூவகைப்படுத்தினார். அவை பிரகார எண்ணம், யதார்த்தங்கள் பற்றிய எண்ணம், நிகழ்வுகளிடையே உள்ள தொடர்பு ரீதியான எண்ணம் என்பனவாகும். (நாராயணன், 1989:85) லொக் கூறிய எண்ணங்கள் பற்றிய கருத்தினை பார்க்லி புலனுணர்ச்சியால் எழுபவை, கற்பனையால் எழுபவை என இரண்டு வகையாகப் பிரிக்கிறார். கற்பனையில் எழும் எண்ணங்கள் எமது உள்ளத்தை சார்ந்தே உள்ளன. எமது உள்ளத்தோடு தொடர்புடையதாக உள்ளன. ஆனால் புலனுணர்ச்சியால் எழுபவை உள்ளத்திலிருந்து எழுபவையல்ல. அது எமக்கு அப்பாற்பட்ட ஒன்றால் உருவாக்கப்பட்டதே என கூறினார். (ஜமாஹீர், 2010:40)

லொக் பாவித்த "எண்ணம்" என்ற கருத்துக்கு பதிலாக ஹியூம் புலக்காட்சி அறிவு என அறிமுகப்படுத்தினார். புலக்காட்சியை நாம் பெறும் எண்ணங்கள், மனப்பதிவுகள் (Impression) என வகுத்து மனப்பதிவுகள் எனக் கூறக்கூடியவைகள் எமது உள்ளத்தில் முதன்முறையாக எழுகின்ற புலனுணர்ச்சி, மனவெழுச்சிகள் போன்றவைகளாகும் என்கின்றார். புறத்தே உள்ளவைகளிலிருந்து எமது உட்பகுதிகளாக சில புலனுணர்வுகள் கிடைக்கின்றன. அவை அகத்தில் பதியப்பட்டு எண்ணங்களாகின்றன என ஹியூம் கூறுகின்றார். உட்பதிவுகள் புலன்களைத் தாக்கும் போது இன்பம், துன்பம், சூடு, குளிர்ச்சி போன்ற உணர்வுகளை அனுபவிக்கின்றோம். அவ்வனுபவம் எமக்கு எண்ணங்களை அதாவது இன்பம், சூடு, குளிர், மென்மை போன்றவைகள் பற்றிய அறிவைத் தருகின்றது. அனுபவ வாதிகளின் அடிப்படைக் கொள்கையானது ஹியூம் இனால் தோற்றப்பாட்டு வாதமாக அடையாளப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படை

யாதெனில் நாம் அனுபவத்தால் இயற்கைப் பொருட்களை அன்றி அவற்றிலிருந்து எழுகின்ற ஒரு சில புலன் தரவுகளை மட்டுமே பெற்றுக் கொள்கின்றோம் என்பதாகும். (ஜமாஹீர், 2010:41)

கலப்பு எண்ணங்கள் எளிய எண்ணங்கள் போன்றவற்றினால் உருவாக்கப்படுகின்ற பொருட்களினது பண்புகள் பற்றியும் லொக் குறிப்பிடுகின்றார். இப்பண்புகள் பற்றிய விளக்கமானது அவரது அறிவாராய்ச்சியல் பற்றிய விளக்கமாகவே அமைகின்றது. லொக் பொருட்களுக்குரிய பண்புகளை இரு பிரிவுகளாக விளக்குகின்றார்.

1. முதன் நிலைப்பண்புகள்
2. வழி நிலைப்பண்புகள்

முதன் நிலைப்பண்பு என்பது பொருட்களுக்கே உரித்துடைய பண்பாகும். பொருள் நிலையில் எத்தகைய மாற்றம் ஏற்பட்டாலும் அதிலிருந்து பிரிக்க முடியா பண்புகள் முதன் நிலைப்பண்புகளாகும். பொருட்களின் உரு எண் இயக்கம் முதலானவை பிரிக்க முடியாத நிலையில் பொருளோடு இணைந்திருக்கும் என்பதனால் இவை முதன் நிலைப்பண்புகள் என அழைக்கப்படுகிறது. மேலும் முதன் நிலைப்பண்புகள் தமக்கு தாமே இருப்பு நிலை உடையவை ஆகையினால் சார்பற்ற அறிவு பெறப்படுவதற்கு முதன் நிலைப்பண்புகளே அடிப்படையாக இருக்கின்றது என லொக் குறிப்பிடுகின்றார்.

வழி நிலை பண்பு என்பது முதன் நிலைப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டு அதில் சில மாற்றங்களை அல்லது திருத்தங்களை மேற்கொண்டு அது தொடர்பாக பெற்றுக் கொள்கின்ற பண்புகளை குறிப்பதாகும். இனிமை, சுவை, நிறம், மணம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

லொக் முதல்நிலைப்பண்புகள், வழிநிலைப்பண்புகள் என்னும் இரண்டும் வேறு வேறு என்னும் கருத்தினை நிலை நிறுத்தினார். பார்க்லி லொக்கின் கருத்தில் மாற்றத்தினை கொண்டு வந்தார். முதல்நிலைப்பண்புகள், வழிநிலைப்பண்புகள் இரண்டும் உண்மையில் ஒன்று என பார்க்லி வாதிடுகின்றார். ஒரு மேசையை காட்சிப்புலனால் காணாது அல்லது தொடுகையால் உணராது அதன் வடிவத்தையும், பருமனையும் எவ்வாறு தீர்மானிப்பது? என்றார். முதலில் வழிநிலைப் பண்பாகிய பொருளின் நிறமும், தொடர்ந்து மென்மை, கடினம் முதலான வழிநிலைப் பண்புகளும் பெறப்படுகின்றன. அதன் பின்னரே பருமன், வடிவம் முதலான முதல்நிலைப் பண்புகள் பெறப்படுகின்றன. அதாவது முதல்நிலைப் பண்புகள் பற்றிய கருத்துக்கள் உண்மையில் வழிநிலைப்பண்புகள் பற்றிய வியாக்கியானங்களே அல்லாது வேறல்ல என பார்க்லி வாதிடுகின்றார். (கிருஷ்ணராஜா, 2011:50)

லொக்கின் புலக்காட்சியில் முக்கியம் பெறும் மற்றுமொரு விடயம் கருத்தாகும். புலக்காட்சியின் வாயிலாகவோ சிந்தனையின் வாயிலாகவோ மனத்தினால் அறியப்படுவது கருத்தாகும். (இராமானுச்சாரி, 37) மனத்தில் கருத்துக்களை பதியச்செய்யும் ஆற்றல் புறப் பொருள்களுக்கு உண்டு. இவ்வாற்றல் பண்புகள் என அழைக்கப்படும். இப்பண்புகள் யாவும் ஒரே தன்மையானதல்ல. இதனால் அவற்றை முதனிலைப் பண்புகள் - திண்மை,

பரப்புடைமை, வடிவம், இயக்க நிலை அல்லது ஓய்வு நிலை, எண்ணிக்கை எனவும் வழிநிலைப் பண்புகள் - உருவம், நிறம், சப்தம், சுவை எனவும் இரண்டாக வகைப்படுத்தினார். உளம் சரியான முறையில் உலகைப் பிரதிபலிக்கிறது. முதனிலைப் பண்புகளே இதைச் செவ்வனே நிறைவேற்றுகிறது. உலகு பற்றிய உளத்தின் வழி வெளிப்படையாக இருப்பவை வழிநிலைப் பண்புகளாகும். (கிருஷ்ணராஜா, 2011:49)

அறிவின் வகைப்பாட்டில் உள்ளுணர்வு அறிவு (Intuitive knowledge), நிருபன அறிவு (Demonstrative knowledge), புலன் வழி அல்லது புலக்காட்சி அறிவு (Sensitive Knowledge) என மூவகை பற்றிக் குறிப்பிடும் லொக் புலக்காட்சி அறிவை யதார்த்த ரீதியாக விளக்கிச் செல்கிறார். (Sahakian,1968:73) எமக்கு புறம்பாக இருக்கின்ற பிரபஞ்சப் பொருட்களின் இருப்புத் தொடர்பாக கிடைக்கின்ற அறிவாகும். உதாரணமாக எனக்கு இப்போது ரோசாப்பூ தெரிகிறது என்பது ஒரு புலக்காட்சி ரீதியான அறிவாகும். புலக்காட்சி அறிவில் அனுபவ அறிவும், அனுபவ நம்பிக்கையும் உள்ளடங்கி இருக்கிறது என்பதை லொக் உணர்ந்திருந்தார். புலக்காட்சி அறிவானது எப்போதும் புலக்காட்சிக்கு உட்படுகின்ற பொருட்களை கடந்து செல்வதாக இருக்காது. அந்த வகையில் கடவுள் இருப்பு, மனித இருப்பு போன்றவை எல்லாம் புலக்காட்சி அறிவல்ல, நிருபன அறிவு என்றார். புலக்காட்சி அறிவானது பொருட்களின் தன்மை பற்றி விளங்கிக்கொள்வது மட்டுமல்லாமல் அவற்றின் புலத்தோற்றப்பாட்டினை மட்டும் புலக்காட்சிக்கு உட்படுத்துவதாகும்.

## 07. முடிவுரை

அனுபவமுதல் வாதத்தில் அறிவின் வாயிலாக அனுபவத்தை முதன்மைப்படுத்துவதன் மூலம் புலக்காட்சி பற்றிய தனது கருத்துக்களை பொருட்கள், பண்புகள், புலன்கள், உணர்வுகள், எண்ணங்கள் என்ற அடிப்படையில் ஜோன் லொக் விளக்கிச் செல்கின்றார். புலக்காட்சியும் அதனோடு தொடர்புபட்ட புலன் வழி உணர்வு நிலையும் உள்ளத்தில் எண்ணங்களை உருவாக்குகின்றன என்பது லொக்கின் பிரதான கருத்தாகும். புலன்கள் புறப்பொருட்களை அவதானிக்கும் போது (அனுபவம்) புறப்பொருட்கள் தொடர்பான பண்புகள் புலக்காட்சியின் வழியாக உள்ளத்தைச் சென்றடைகிறது என்றார். இவ்வகையில் அறிவினை யதார்த்த ரீதியில் விளக்கிச் சென்ற லொக்கின் கருத்தினை நோக்கும் போது இப்புலக்காட்சி என்பதும் அனுபவமேயாகும். புலன்களின் தொழிற்பாடு, அகத்தின் தொழிற்பாடு இரண்டும் புலக்காட்சியில் இன்றியமையாதவைதான் என்றாலும் இதற்கு அப்பாலும் காட்சியின் விஸ்தீரணம் அகன்று செல்கிறது. புலன் கடந்த காட்சி (Extra Sensory Perception) என்பது புறப்பொருள் (அனுபவம்), காண்போனின் அகநிலையையும் தாண்டி புலக்காட்சி என்பது ஒருவகை இயங்கியல் சார் பொறிமுறைச் செயற்பாடு என்பதை அர்த்தப்படுத்தி நிற்கிறது எனலாம்.

**உசாத்துணை நூல்கள**


- அனஸ். எம்.எஸ்.எம், (2006) *மெய்யியல் - கிரேக்கம் முதல் தற்காலம் வரை*, கொழும்பு-குமரன் புத்தக இல்லம்.
- இராமானுச்சாரி.இரா.,(ஆண்டு இல்லை), *அறிவாராய்ச்சியியல்,* சென்னை-தமிழ் வெளியீட்டுக்கழகம்.
- ஜமாஹீர். பீ.எம், (2009) *பொது உளவியல் ஓர் அறிமுகம்*, கண்டி-இலங்கை தென்கிழக்கு ஆய்வு மையம்.
- ஜமாஹீர். பீ.எம், (2010) *மெய்யியல் - பிரச்சினைகளும் பிரயோகங்களும்*, கண்டி-நதா வெளியீடு.
- நாராயணன், க., (1989), *மேலைநாட்டு மெய்ப்பொருள்,* சென்னை-தமிழ் புத்தகாலயம்.
- கிருஷ்ணராஜா, சோ (1995**),** *சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம்,* கொழும்பு-இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
- கிருஷ்ணராஜா, சோ (2011**),** *மெய்யியல் ஓர் அறிமுகம்,* கொழும்பு-குமரன் புத்தக இல்லம்.
- பாஸ்கரன், க., (2006), *சைவ சித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியல்,* தஞ்சாவூர்-தமிழ்ப் பல்கலைக்கழகம்.
- Russell, B., (1927), *The Problems of Philosophy*, India-Oxford University Press.
- Sahakian, W.S., (1968), *Out line – History of Philosophy*, New York-Barnes & Noble.
- Banjamin, B. Lahey., (1998), *Psychology An Introduction*, Us-Mc Graw Hill.